உ

கணபதி துணை

ஒளவையார் அருளிச் செய்த

# ஆத்திசூடி, கொன்றைவேந்தன்

மூலமும்



யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின்

திருத்தப்பட்ட உரையும்

வெளியீடு:

## சைவ பரிபாலன சபை

யாழ்ப்பாணம்.

**2001**

[விலை ரூபா 40/=]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

305.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

ஔவையார் அருளிச் செய்த

# ஆத்திசூடி,

# கொன்றைவேந்தன்

மூலமும்

யாழ்ப்பாணத்து நல்லூர்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின்**

**திருத்தப்பட்ட உரையும்**

வெளியீடு:
சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்.
**2001**

[விலை ரூபா 40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பற்றிய விவரங்கள்

நூலின் பெயர் : **ஆத்திசூடி, கொன்றை வேந்தன்**

நூலாசிரியர் : **ஔவையார்**

பக்கங்கள் : **28**

விலை : **ரூ. 40/=**

அச்சிட்ட நூல் எண்ணிக்கை } 1000

வெளியீடு : **சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.**

அச்சிட்டோர் : தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# ஔவையார் அருளிச்செய்த
# ஆத்திசூடி
### மூலமும் உரையும்

## காப்பு

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே**

பதவுரை; ஆத்தி — திருவாத்திப்பூமாலையை, சூடி தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த — விரும்பிய, தேவனை — பிள்ளையாகிய விநாயகக்கடவுளை, ஏத்தி ஏத்தி — துதித்துத் துதித்து, தொழுவோம் - வணங்குவோம், யாம் - நாங்கள் என்றவாறு.
தேவன் - பிள்ளை . ஏ - ஈற்றசை

## சூத்திரம்

1. அறஞ் செய விரும்பு

ப — ரை. அறம் - தருமத்தை, செய - செய்வதற்கு, விரும்பு — நீ ஆசை கொள்ளு.

2. ஆறுவது சினம்

ப — ரை. ஆறுவது — (உன்னுள்ளே) தணிய வேண்டுவது, சினம் - கோபமே ஆம்.

3. இயல்வது கரவேல்

ப — ரை இயல்வது (கொடுப்பதற்கு) இசைவதை கரவேல், (நீ வறுமையினாலே இரப்பவர்களுக்கு) ஒளி யாதே.

4. ஈவது விலக்கேல்

ப — ரை ஈவது — (தருமத்தைக்குறித்து ஒருவருக்கு ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல் - நீ தடுக்காதே.

5. உடையது விளம்பேல்

ப — ரை, உடையது — (உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல் - (நீ பிறர் அறியும்படி) சொல்லாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

305.0145

### 6. ஊக்கமது கைவிடேல்

ப — ரை ஊக்கமது - (செய்தொழிலில்) மனஞ் சோராமையை, கைவிடேல் - நீ கைவிடாதே.

### 7. எண்ணெழுத் திகழேல்

ப — ரை எண் - கணித நூலையும், எழுத்து - இலக்கண நூலையும், இகழேல் - நீ இகழ்ந்து தள்ளாதே. (புகழ்ந்து கல் என்பது கருத்து) கணிதம் - கணக்கு.

### 8. ஏற்ப திகழ்ச்சி

ப — ரை ஏற்பது — (ஒருவரிடத்திலே போய்) இரப்பது இகழ்ச்சி — பழிப்பாகும்.

### 9. ஐய மிட்டுண்

ப — ரை ஐயம் - பிச்சையை, இட்டு - (இரப்பவர்களுக்குக்) கொடுத்து உண் - நீயும் உண்ணு

### 10. ஒப்புர வொழுகு

ப — ரை ஒப்புரவு. - உலகநடையை அறிந்து, ஒழுகு - (நீ அந்த வழியிலே) நட

### 11. ஓதுவ தொழியேல்

ப — ரை ஓதுவது - (அறிவு நூல்களை) வாசிப்பதை, ஒழியேல் - (நீ மரண பரியந்தம்) விடாதே.

### 12. ஔவியம் பேசேல்

ப — ரை. ஔவியம் - பொறாமை வார்த்தைகளை, பேசேல் - நீ பேசாதே.

### 13. அஃகஞ் சுருக்கேல்

ப — ரை அஃகம் - தானியவிலையை (தானிய அளவை), சுருக்கேல் - (நீ அதிக லாபத்துக்காகக்) குறையாதே.

### 14. கண்டொன்று சொல்லேல்

ப — ரை கண்டு - (ஒன்றைக்) கண்டு, ஒன்று — வேறொன்றை, சொல்லேல் - (நீ சாக்ஷியாகும் போது) சொல்லாதே. (கண்டபடியே சொல்லென்பது கருத்து.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 15. நப்போல் வளை

ப — ரை நப்போல் - நகரம் (தான் பிரயோசன முள்ளதாய் இருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்) போல, வளை — (நீ பிரயோசன முள்ளவனாய் இருந்து உன் இனத்தைத்) தழுவு

நகரமானது அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் என்று சொல்லுக்குக் காரணமாய் வரும். அதன் வருக்கங்களாகிய **நா நி நீ நு நூ நெ நே நை நொ நோ நௌ** என்கின்ற பதினொன்று சொல்லுக்குக் காரணமாதல் இல்லை. ஆயினும், நகரத்தின் பொருட்டு இவைகளையும் நெடுங்கணக்கிலே வழங்குவார்கள். அதுபோலவே, நீ கல்வி செல்வங்களினாலே பிறருக்கு உதவி செய்வாயாயின், அவர் உன்னதுத் தழுவுவதன்றி உன் பொருட்டு உன் இனத்தாரையும் தழுவுவர் என்பதாம்.

### 16. சனி நீ ராடு

ப — ரை சனி - சனிக்கிழமைதோறும், நீ ஆடு - (எண்ணெய் இட்டுக் கொண்டு) நீரிலே தலைமுழுகு.

**புதன் கிழமையிலும் முழுகலாம்**

### 17.ஞயம்பட வுரை

ப — ரை ஞயம்பட - (பேசுஞ்சொல்லிலே) இன்பம் விளையும், உரை - நீ பேசு.

நயன் என்பது ஞயம் எனப் போலியாயிற்று.

### 18. இடம்பட வீடெடேல்

ப — ரை இடம் - இடமானது, பட - (அளவுக்கு மேற்பட்டு வெறுமையாய்க்) கிடக்கும்படி, வீடு - வீட்டை, எடேல் - (நீ பெரியதாகக்) கட்டாதே.

### 19. இணக்க மறிந் திணங்கு

ப — ரை இணக்கம் - (சிநேகத்துக்கு ஏதுவாகிய) நற்குண நற்செய்கைகளை, அறிந்து — தெளிந்து, இணங்கு- (பின் ஒருவனோடு) சிநேகஞ் செய்.

### 20. தந்தை தாய் பேண்

ப — ரை தந்தை - (நீ உன்) பிதாவையும், தாய் - மாதாவையும், பேண் - (எப்போதும் பூசித்துக்) காப்பாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. நன்றி மறவேல்

ப — ரை நன்றி - (ஒருவர் உனக்குச் செய்த) உபகாரத்தை, மறவேல் - (நீ ஒருபோதும்) மறவாதே.

22. பருவத்தே பயிர்செய்

ப — ரை பயிர் — பயிர்களை, பருவத்தே — (அதுஅது விளையும்) பக்குவகாலத்திலே, செய் - (வேண்டும் முயற்சியிலே வழுவாமல்) இடு.

பயிருக்கு வேண்டும் முயற்சிகளாவன. உழுதல், எரு இடுதல், களைபிடுங்குதல், நீர் பாய்ச்சல், காத்தல் என்கிற ஐந்தும் ஆம்.

23. மன்றுபறித் துண்ணேல்

ப — ரை மன்று தருமசபையிலே இருந்துகொண்டு, பறித்து — (வழக்குத் தீர்ப்புக்கு வரும் குடிகளுடைய பொருளைக்) கவர்ந்து,உண்ணேல் - நீ சீவனம் பண்ணாதே.

24. இயல்பலா தனசெயல்

ப — ரை இயல்வு அலாதன — (தரும நூலுக்குப்) பொருத்த மல்லாத வைகளை, செயேல் - நீ — செய்யாதே.

25. அரவ மாட்டேல்

ப — ரை அரவம் - (நஞ்சையுடைய) பாம்புகளை, ஆட்டேல் - (நீ பிடித்து) ஆட்டாதே.

26. இலவம்பஞ் சிற்றுயில்

ப - ரை இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சு மெத்தையிலே, துயில் - நீ நித்திரை செய்

27. வஞ்சகம் பேசேல்

ப — ரை வஞ்சகம் - கபட வார்த்தைகளை, பேசேல் - நீ பேசாதே.

28. அழகலா தனசெயேல்

ப — ரை அழகு அலாதன — (நீ துன்பப்பட வந்த காலத்தும்) இழிவுள்ள செயல்களை, செயேல் - செய்யாதே.

அழகுடையன உயர்வுள்ள செயல்கள் ஆதலால், அழகலாதன இழிவுள்ள செயல்கள் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. இளமையிற் கல்

ப — ரை இளமையில் - இளமைப் பிராயத்திலே, கல் - (நீ வித்தையைக்) கற்றுக்கொள்.

30. அறனை மறவேல்

ப — ரை அறனை — தருமத்தை, மறவேல் - (நீ ஒரு போதும்) மறவாதே.

31. அனந்த லாடேல்

ப — ரை அனந்தல் - நித்திரையை, ஆடேல் - ( நீஅதிகமாகச்) செய்யாதே.

32. கடிவது மற

ப — ரை கடிவது — (ஒருவரைச்) சினந்து பேசுவதை மற - நீ மறந்து விடு

33. காப்பது விரதம்

ப — ரை காப்பது — (உயிர்களுக்குத் தீங்குசெய்யாமல் அவைகளைக்) காப்பாற்றுவதே விரதம் - விரதமாம்.

34. கிழமைப் படவாழ்

ப — ரை கிழமைப்பட — (உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கும்) உரிமைப்படும்படி, வாழ் - நீ வாழு.

35. கீழ்மை யகற்று

ப — ரை கீழ்மை — கீழ்மையாகிய குணத்தை, அகற்று — நீ நீக்கு

36. குணமது கைவிடேல்

ப — ரை குணமது — (மேலாகிய) குணத்தை, கைவிடேல் - நீ கை விடாதே.

37. கூடிப் பிரியேல்

ப — ரை கூடி — (நல்லவரோடு) சிநேகித்து, பிரியேல் - (நீ பின் அவரை விட்டு) நீங்காதே.

38. கெடுப்ப தொழி

ப — ரை கெடுப்பது — பிறருக்குக் கேடு செய்வதை, ஒழி — நீ விட்டுவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 39. கேள்வி முயல்

ப — ரை கேள்வி — (கற்றவர் சொல்லும், நூற்பொருளைக்) கேட்பதற்கு, முயல் - நீ முயற்சி செய்.

### 40. கைவினை கரவேல்

ப — ரை கைவினை — (உனக்குத் தெரிந்த) கைத்தொழிலை, கரவேல் - நீ (சமயத்திலே) ஒளியாதே

### 41. கொள்ளை விரும்பேல்

ப — ரை கொள்ளை — (பிறருடைய பொருளைக்) கொள்ளையிடுவதற்கு, விரும்பேல். — நீ ஆசைப்படாதே.

### 42. கோதாட் டொழி

ப — ரை கோது — குற்றம் பொருந்திய, ஆட்டு — விளையாட்டை ஒழி — நீ நீக்கு

### 43. சக்கர நெறிநில்

ப — ரை சக்கர நெறி (அரசனுடைய ஆஞ்ஞையாகிய) சக்கரம் செல்லும் வழியிலே, நில்- (நீ அடங்கி) நில். (அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நட என்பது கருத்து.

### 44. சான்றோ ரினத்திரு

ப — ரை சான்றோர் — அறிவினாலே நிறைந்தவர்களுடைய, இனத்து - கூட்டத்திலே இரு — (நீ எந்நாளும் சேர்ந்து) இரு.

### 45. சித்திரம் பேசல்

ப — ரை சித்திரம் - மெய்போலத் தோன்றும் பொய் மொழிகளை, பேசேல் - நீ பேசாதே.

### 46. சீர்மை மறவேல்

ப — ரை சீர்மை — புகழுக்கு ஏதுவாகிய குணத்தை மறவேல் - நீ மறந்து விடாதே.

### 47. சுளிக்கச் சொல்லேல்

ப — ரை சுளிக்க — (கேட்பவர்) கோபிக்கும்படியாக, சொல்லேல் - (நீ ஒன்றையும்) பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. சூது விரும்பேல்

ப – ரை சூது - சூதாடலை, விரும்பேல் - (நீ ஒருபோதும்) விரும்பாதே.

49. செய்வன திருந்தச் செய்

ப – ரை செய்வன – செய்யுங் காரியங்களை, திருந்த – செவ்வையாக செய் - நீ செய்.

50. சேரிட மறிந்து சேர்

ப – ரை சேர் இடம் - அடையத்தகும் (நன்மையாகிய இடத்தை, அறிந்து - - தெரிந்து, சேர் – நீ அடை.

51. சையெனத் திரியேல்

ப – ரை சை என – (பெரியோர் உன்னைச்) சீ என்று அருவருக்கும்படி, திரியேல் - (நீ துட்டனாய்த்) திரியாதே.

52. சொற் சோர்வு படேல்

ப – ரை சொல் - (நீ பிறரோடு பேசும்) சொற்களிலே,சோர்வுபடேல் - மறதிபடப் பேசாதே. (சொல்ல வேண்டுவதை மறவாமற் சொல் என்பது கருத்து)

53. சோம்பித் திரியேல்

ப – ரை சோம்பி – (நீ செய்ய வேண்டும் முயற்சியைச் செய்யாமல்) சோமபல் கொண்டு, திரியேல் - (வீணாகத்) திரியாதே.

54. தக்கோ னெனத்திரி

ப – ரை தக்கோன் என – (உன்னைப் பெரியோர்கள்) யோக்கியவன் என்று புகழும்படி, திரி – நீ திரி.

55. தானமது விரும்பு

ப – ரை தானமது – (சற்பாத்திரங்களிலே) தானம் செய்தலை, விரும்பு – நீ விரும்பு

56. திருமாலுக் கடிமை செய்

ப – ரை திருமாலுக்கு – விஷ்ணுவுக்கு, அடிமை செய் - நீ தொண்டு பண்ணு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 57. தீவினை யகற்று

ப – ரை. தீவனை – பாவச்செயல்களை, அகற்று – (நீ செய்யாமல்) நீக்கு

## 58. துன்பத்திற் கிடங்கொடேல்

ப – ரை. துன்பத்திற்கு - (தொழில் செய்யும் போது) முயற்சியினாலே வரும் சரீரப் பிரயாசத்தால் ஆகிய துன்பத்துக்கு, இடம் கொடேல் - (நீ சிறிதாயினும்) இடங்கொடாதே. (அத்துன்பத்தை இன்பமென்று கொண்டு முயற்சியை விடாது செய் என்பது கருத்து)

## 59. தூக்கி வினைசெய்

ப – ரை. தூக்கி – (முடிக்கும் உபாயத்தை) ஆராய்ந்து, வினை – ஒரு தொழிலை செய் - (நீ அதன்பின்பு) செய்.

## 60. தெய்வ மிகழேல்

ப – ரை. தெய்வம் - கடவுளை, இகழேல் - (நீ மறந்தாயினும்) இகழாதே.

## 61. தேசத்தோ டொத்து வாழ்

ப – ரை. தேசத்தோடு – நீ வசிக்கும் தேசத்திலுள்ளவர்களுடனே, ஒத்து – (பகையில்லாமல்) ஒத்து வாழ் - வாழு

## 62. தையல்சொற் கேளேல்

ப – ரை. தையல் - (உன்) மனைவியுடைய, சொல் - சொல்லை, கேளேல் - நீ கேட்டு நடவாதே.

## 63. தொன்மை மறவேல்

ப – ரை. தொன்மை – பழைமையாகிய சிநேகத்தை மறவேல் - நீ மறந்து விடாதே.

## 64. தோற்பன தொடரேல்

ப – ரை. தோற்பன – தோல்வியடையக் கூடிய வழக்குகளிலே, தொடரேல் - நீ சம்பந்தப்படாதே.

## 65. நன்மை கடைப்பிடி

ப – ரை. நன்மை – புண்ணியத்தையே, கடைப்பிடி (நீ விடாமல்) உறுதியாகப் பிடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. நாடொப் பனசெய்

ப — ரை. நாடு — உன் நாட்டில் உள்ளோர் பலரும், ஒப்பன — ஒத்துக் கொள்ளத்தக்க நல்ல காரியங்களை, செய் - நீ செய்

67. நிலையிற் பிரியேல்

ப — ரை. நிலையில் - (நீ நிற்கின்ற உயர்ந்த) நிலையிலே நின்று, பிரியேல் - (ஒருபோதும்) நீங்காதே.

68. நீர்விளை யாடேல்

ப — ரை. நீர் — (ஆழம் உள்ள) நீரிலே, விளையாடேல் - நீ (நீந்தி) விளையாடாதே.

69. நுண்மை நுகரேல்

ப — ரை. நுண்மை — (நோயைத் தருகின்ற) சிற்றுண்டிகளை, நுகரேல் - நீ உண்ணாதே.

70. நூல் பல கல்

ப — ரை. நூல் பல — (அறிவை வளர்க்கிற) நூல்கள், பலவற்றையும், கல் - நீ கற்றுக்கொள்.

71. நெற்பயிர் விளை

ப — ரை. நெற் பயிர் — நெல்லுப்பயிரை, விலள — (நீ வேண்டிய முயற்சி செய்து) விளைவி.

72. நேர்பட வொழுகு

ப — ரை. நேர்பட — (உன் ஒழுக்கம் கோணாமல்) செவ்வைப்பட, ஒழுகு — நீ நட.

73. நைவினை நணுகேல்

ப — ரை. நை — (பிறர்) கெடத்தக்க, வினை — (தீ) வினைகளை, நணுகேல் - (நீ ஒரு போதும்) சாராதே.

74. நொய்ய வுரையேல்

ப — ரை. நொய்ய - (பயன் இல்லாத) அற்ப வார்த்தைகளை, உரையேல் - (நீ ஒருபோதும்) சொல்லாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 75. நோய்க் கிடங்கொடேல்

ப — ரை. நோய்க்கு — வியாதிகளுக்கு, இடங்கொடேல் - (அவபத்தியம் முதலானவைகளைச் செய்து) இடங்கொடாதே.

### 76. பழிப்பன பகரேல்

ப — ரை. பழிப்பன — (அறிவுடையார்களாலே) பழிக்கப்படுவனவாகிய இழிசொற்களை, பகரேல் - நீ பேசாதே.

இழிசொற்களாவன: பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்கின்ற நான்குமாகும்.

### 77. பாம்பொடு பழகேல்

ப — ரை. பாம்பொடு — (பால் கொடுத்தவருக்கும் விஷத்தைக் கொடுக்கிற) பாம்பைப் போல்பவர்களுடனே, பழகேல் - நீ சகவாசஞ் செய்யாதே.

### 78. பிழைபடச் சொல்லேல்

ப — ரை. பிழைபட — வழுக்கள் உண்டாகும்படி, சொல்லேல் - (நீ ஒன்றையும் பேசாதே.

### 79. பீடு பெறநில்

ப — ரை. பீடு — பெருமையை, பெற — பெறும்படியாக நில் - (நீ நல்ல வழியிலே) நில்.

### 80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்

ப — ரை. புகழ்ந்தாரை — உன்னைத் துதிசெய்து அடுத்தவரை, போற்றி — (கைவிடாமற்) காப்பாற்றி வாழ் - நீ வாழு.

### 81. பூமி திருத்தியுண்

ப — ரை. பூமி — உன் விளை நிலத்தை, திருத்தி — சீர் திருத்திப் பயிர்செய்து, உண் - நீ உண்ணு

### 82. பெரியாரைத் துணைக்கொள்

ப — ரை பெரியாரை — (அறிவிலே சிறந்த) பெரியோரை, துணைக்கொள் - உனக்குத் துணையாகப் பேணிக் கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 83. பேதைமை யகற்று

ப — ரை பேதைமை —(பிறவிக்குக் காரணமாகிய) அஞ்ஞானத்தை, அகற்று — (நீ மெய்ஞ்ஞானத்தினாலே) போக்கு

## 84. பையலோ டிணங்கேல்

ப — ரை பையலோடு — சிறுபிள்ளையோடு, இணங்கேல் - நீ கூடாதே.

## 85. பொருடனைப் போற்றி வாழ்

ப — ரை பொருள் தனை — திரவியத்தை, போற்றி (மேன்மேலும் உயரும்படி) காத்து வாழ் - நீ வாழு.

## 86. போர்த்தொழில் புரியேல்

ப — ரை போர் - சண்டையாகிய, தொழில் - தொழிலை, புரியேல் - நீ செய்யாதே.

## 87. மனந் தடுமாறேல்

ப — ரை மனம் - மனசு, தடுமாறேல் - (யதொரு விஷயத்திலும்) கலங்காதே

## 88. மாற்றானுக் கிடங்கொடேல்

ப — ரை மாற்றானுக்கு — பகைவனுக்கு, இடம் கொடேல் - (உன்னை நெருக்கிப் பின் வருத்தும்படியாக நீ) இடங்கொடாதே.

## 89. மிகைபடச் சொல்லேல்

ப — ரை மிகைபட — (சொற்கள் சுருங்காமல்) அதிகப்படும்படி, சொல்லேல் - நீ சொல்லாதே.

## 90. மீதூண் விரும்பேல்

ப — ரை மீது ஊண் — அதிக போசனத்துக்கு விரும்பேல் - நீ ஆசைப்படாதே

## 91. முனைமுகத்து நில்லேல்

ப — ரை முனைமுகத்து — சண்டை முகத்திலே, நில்லேல் - (நீ போய்) நில்லாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 92. மூர்க்கரோ டிணங்கேல்

ப — ரை மூர்க்கரோடு — அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல் - நீ சிநேகம் பண்ணாதே.

### 93. மெல்லினல்லா டோள்சேர்

ப — ரை மெல் - மெல்லிய, இல் - (உன்) மனையாட்டியாகிய, நல்லாள் - பெண்ணினுடைய, தோள் - தோள்களையே, சேர் — நீ புணர்

இதனாலே, பிறர்மனைவியர், பரத்தையர் என்கின்ற இவர்களுடைய தோள்களை ஒருபோதும் புணராதே என்பது பெறப்படும்.

### 94. மேன்மக்கள் சொற்கேள்

ப — ரை மேன் மக்கள் - மேன்மையாகிய மனிதருடைய, சொல் - சொல்லை, கேள் - நீ கேட்டு நட

### 95. மைவிழியார் மனையகல்

ப — ரை மை விழியார் — மைதீட்டிய கண்களையுடைய வேசிகளது, மனை — வீட்டை, அகல் - (நீ ஒரு போதும் கிட்டாமல்) அகன்று போ.

### 96. மொழிவ தறமொழி

ப — ரை மொழிவது — சொல்லப்படும் பொருளை அற — (சந்தேகம்) நீங்கும்படி, மொழி — நீ சொல்லு.

### 97. மோகத்தை முனி

ப — ரை மோகத்தை —(நிலையாத பொருள்களின் மேலதாகிய) ஆசையை, முனி — நீ கோபித்து விலக்கு

### 98. வல்லமை பேசேல்

ப — ரை வல்லமை — (உன்னுடைய) சாமர்த்தியத்தை, பேசேல் - (நீ புகழ்ந்து) பேசாதே.

### 99. வாதுமுற் கூறேல்

ப — ரை வாது — வாதுகளை. முன் - (பெரியோர்) முன்னே. கூறேல் - நீ பேசாதே. (வாது — தருக்கம்)

### 100. வித்தை விரும்பு

ப — ரை வித்தை — கல்விப்பொருளையே, விரும்பு — நீ விரும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. வீடு பெறநில்

ப — ரை வீடு — மோஷசத்தை, பெற — அடையும்படி, நில் - (அதற்குரிய ஞானவழியிலே) நில்

102. உத்தமனா யிரு

ப — ரை உத்தமனாய் - (நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரினும்) மேலானவனாகி, இரு — நீ இரு.

103. ஊருடன் கூடி வாழ்

ப — ரை ஊருடன் - ஊரவர்களுடனே, கூடி — (சுபா சுபகன்மங்களிலே) அளாவி வாழ் - நீ வாழு.

104. வெட்டெனப் பேசேல்

ப — ரை வெட்டென — கத்திவெட்டைப் போல, பேசல் - நீ (ஒருவரோடுங் கடினமாகப்) பேசாதே.

105. வேண்டி வினைசெயேல்

ப — ரை வேண்டி — (யாதொரு பிரயோசனத்தை) விரும்பி, வினை — தீவினையை செயேல் - (நீ ஒருவருக்கும்) செய்யாதே.

106. வைகறைத் துயிலெழு

ப — ரை வைகறை — (நீ தினந்தோறும்) விடியற்காலத்திலே, துயில் - நித்திரையை விட்டு எழு — எழுந்திரு.

107. ஒன்னாரைத் தேறேல்

ப — ரை ஒன்னாரை — பகைவர்களை, தேறேல் - (நீ ஒருபோதும்) நம்பாதே.

108. ஓரஞ் சொல்லேல்

ப — ரை ஓரம் - பஷசபாதத்தை, சொல்லேல் - (நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே.

ஆத்திசூடி மூலமும் — உரையும் —

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# ஔவையார் அருளிச்செய்த
# கொன்றைவேந்தன்
## மூலமும் உரையும்

### காப்பு

**கொன்றை வேந்தன் செல்வ னடியிணை**
**என்று மேத்தித் தொழுவோ மியாமே.**

பதவுரை:- கொன்றை - கொன்றைப் பூமாலையைச் சூடிய, வேந்தன் - சிவபெருமானுக்கு, செல்வன் - குமாரராகிய விநாயகக் கடவுளுடைய, அடி இணை - பாதங்களிரண்டையும், என்றும் - எந்நாளும், ஏத்தி – துதிசெய்து, தொழுவோம் - வணங்குவோம் யாம் - நாங்கள் என்றவாறு.

**ஏகாரம் ஈற்றசை.**

### சூத்திரம்

**அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம் -1**

ப – ரை. அன்னையும் - தாயும், பிதாவும் - தகப்பனும், முன் - முன்னே , அறி – காணப்பட்ட, தெய்வம் - தெய்வங்களாவார்.

**ஆலயந் தொழுவது சாலவு நன்று -2**

ப – ரை. ஆலயம் - கோயிலுக்குப்போய், தொழுவது – கடவுளை வணங்குவது, சாலவும் - மிகவும், நன்று – நல்லது.

**இல்லற மல்லது நல்லற மன்று -3**

ப – ரை. இல்லறம் - (மனையாளோடு கூடிச் செய்யும்) இல்லற மானது, நல் அறம் - எளிதிற் செய்யத்தகும் அறமாகும் , அல்லது - இல்லறமல்லாத துறவறமானது, அன்று – எளிதிற் செய்யத்தகும் அறமன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் -4**

ப – ரை. ஈயார் – கொடாதவருடைய, தேட்டை – சம்பாத்தியத்தை, தீயார் – (கள்ளர் முதலாகிய) தீயவர், கொள்வார் – அபகரிப்பார்.

**உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு -5**

ப – ரை. உண்டி – போசனம், சுருங்குதல் - (அளவிற்) குறைதல், பெண்டிற்கு பெண்டுகளுக்கு, அழகு – அழகாகும்.

**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் -6**

ப – ரை. ஊருடன் - (தான் இருக்கும்) ஊராருடன், பகைக்கின் - (ஒருவன்) விரோதித்தால், வேருடன் - (தன்) வம்சத்துடன், கெடும் - (அவன்) கெடுவான்.

**எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும் -7**

ப – ரை. எண்ணும் - கணித நூலும், எழுத்தும் - இலக்கண நூலும், கண் எனத் தகும் – (மனிதருக்கு) இரண்டு கண்களென்று சொல்லப் படும்.

**ஏவாமக்கண் மூவா மருந்து -8**

ப – ரை. ஏவா – (பெற்றவர் இதைச் செய் என்று) ஏவுதற்கு முன் குறிப்பறிந்து செய்கிற, மக்கள் - பிள்ளைகள் மூவாமருந்து – (அப் பெற்றவருக்குத்) தேவாமிர்தம் போல்வார்

**ஐயம் புகினுஞ் செய்வன செய் -9**

ப – ரை. ஐயம் புகனும் - பிச்சையெடுத்தாலும் செய்வன –
செய்யத்தகுங் கருமங்களையே செய் - (நீ விடாது) செய்.

**ஒருவனைப் பற்றி யோரகத் திரு - 10**

ப – ரை. ஒருவனை – (நற்குணமுடைய) ஒருவனை, பற்றி – (துணையாகப்) பற்றிக்கொண்டு, ஓரகத்து - ஓரிடத்திலேதானே இரு – (நீ எப் போதும்) வாசம்பண்ணு.

**ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம் -11**

ப – ரை. வேதியர்க்கு – பிராமணருக்கு, ஒழுக்கம் - ஆசாரமானது, ஓதலின் - (வேதம்) ஓதலினும், நன்றே – நல்லதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு - 12**

ப — ரை. ஔவியம் - பொறாமை வார்த்தைகளை, பேசுதல் - (ஒருவன்) பேசுதல், ஆக்கத்திற்கு — (அவன்) செல்வத்திற்கு, அழிவு — கேட்டைத் தருவதாகும்.

**அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு - 13**

ப — ரை. அஃகமும் - தானியத்தையும், காசும் - திரவியத்தையும், சிக்கெனத்தேடு — வீண் செலவு செய்யாமற் சம்பாதி

**கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை - 14**

ப — ரை. கற்பு எனப்படுவது — (பெண்களுக்குக்) கற்பென்று சொல்லப்படுவது, சொல் (கணவர்) சொல்லுக்கு, திறம்பாமை — தப்பி நடவாமையாகும்.

**காவ றானே பாவையர்க் கழகு - 15**

ப — ரை. காவல் தானே — (கற்புக்கு அழிவு வராமல் தம்மைக்) காத்துக் கொள்வது தானே, பாவையர்க்கு — பெண்களுக்கு, அழகு — அழகாகும்.

**கிட்டா தாயின் வெட்டென மற - 16**

ப — ரை. கிட்டாது ஆயின் - (இச்சித்த ஒருபொருள்) கிடையாதானால்,, வெட்டென — சீக்கிரத்திலேதானே, மற - (அப்பொருளை) மறந்துவிடு.

**கீழோ ராயினுந் தாழ வுரை - 17**

ப — ரை. கீழோராயினும் - (கேட்பவர் உனக்குக்) கீழ்ப்பட்டவராய் இருந்தாலும், தாழ — (உன் சொல்) வணக்கமுடையதாய் இருக்கும்படி, உரை. (நீ அவருடன்) பேசு.

**குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை - 18**

ப — ரை. குற்றம் - குற்றங்களை, பார்க்கின் - (ஆராய்ந்து) பார்த்தால், சுற்றம் - உறவாவோர், இல்லை — (ஒருவரும்) இல்லை.

**கூரம் பாயினும் வீரியம் பேசேல் - 19**

ப — ரை. கூர் அம்பு ஆயினும் - (உன் கையிலிருக்கின்றது) கூர்மை பொருந்திய அம்பானாலும், வீரியம் - வீரத்தன்மையை, பேசேல் - (நீ வீணாகப்) பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கெடுவது செய்யின் விடுவது கருமம் - 20**

ப – ரை. கெடுவது – கெடுவதை, செய்யின் - (தன் சினேகன்) செய்தால், விடுவது – (அவன் சினேகத்தை) விடுவதே, கருமம் - (விவேகிக்கு) நற்செய்கையாம்

**கேட்டி லுறுதி கூட்டு முடைமை - 21**

ப – ரை. கேட்டில் - (கைப்பொருள்) இழந்த காலத்தில், உறுதி – மனத் தளராமை. உடைமை – (முன்போல அப்) பொருளுடையனாந் தன்மையை, கூட்டும் - சேர்க்கும்

**கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி - 22**

ப – ரை. கைப்பொருள் தன்னில் - கையிலிருக்கின்ற பொருளைப் பார்க்கிலும், மெய்ப்பொருள் - பொருளாவது, கல்வி – கல்வியேயாம்.

**கொற்றவ னறித லுற்றிடத் துதவி - 23**

ப – ரை. கொற்றவன் - அரசனானவன், அறிதல் - (ஒருவனை) அறிந்திருத்தல், உற்ற இடத்து – (அவனுக்கு ஆபத்து) வந்த இடத்து உதவி – உதவியாகும்.

**கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு - 24**

ப – ரை. கோட்செவி – கோள் கேட்குங் குணத்தோனுடைய காதிலே, குறளை – (பிறர்மேல் ஒருவன் வந்து சொன்ன) கோளானது. காற்றுடன் - காற்றுடன் சேர்ந்த, நெருப்பு – நெருப்பைப் போல மூளும்

**கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை - 25**

ப – ரை. கௌவை – (பிறர்மேலே) பழிச்சொல்லுகளை, சொல்லின் - (ஒருவன்) சொல்லினால், எவ்வருக்கும் - எல்லாருக்கும், பகை – (அவன்) பகை யாவான்.

**சந்ததிக் கழகு வந்தி செய்யாமை - 26**

ப – ரை. சந்ததிக்கு – தன் வம்சம் பெருகுவதற்கு, அழகு – அழகாவது, வந்தி மலடியாக, செய்யாமை – செய்யாமல் (தன் மனைவி யாளோடு) கூடி வாழ்வதலாம்.

**சான்றோ ரென்கை யீன்றோட் கழகு - 27**

ப – ரை. சான்றோர் என்கை – (தன் புத்திரரைக் கல்வியறிவால்) நிறைந்தோர் என்று (கற்றவர்) சொல்லுகிறது ஈன்றோட்கு – பெற்றவளுக்கு, அழகு – அழகாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு - 28

ப - ரை. சிவத்தை - (முதற் பொருளாகிய) பரமசிவத்தை, பேணின்- (ஒருவன்) வழிபட்டால், தவத்திற்கு - (அவன் செய்யுந்) தவத்திற்கு, அழகு - அழகாகும்.

## சீரைத் தேடி னேரைத் தேடு - 29

ப - ரை. சீரை - சௌக்கியத்தை, தேடின் - (உனக்குத்) தேடுவாயானால், ஏரை - பயிரிடுந் தொழிலை, தேடு - நீ தேடிக்கொள்.

## சுற்றத்திற் கழகு சூழ விருத்தல் - 30

ப - ரை. சுற்றத்திற்கு - உறவினருக்கு, அழகு - அழகாவது, சூழ - (சுபாசுபங்களிலே பலரும் வந்து) சூழ இருத்தல் - (சமீபங்கிலே) குடியிருக்கையாகும்.

## சூதும் வாதும் வேதனை செய்யும் - 31

ப - ரை. சூதும் - சூதாடுதலும், வாதும் - தருக்கம் போசுதலும், வேதனை - வருத்தத்தை, செய்யும் - உண்டாக்கும்.

## செய்தவ மறந்தாற் கைதவ மாளும் - 32

ப - ரை. செய்தவம் - செய்யுந் தவத்தை, மறந்தால் - (ஒருவன்) மறந்தால், கைதவம் - பொய்யாகிய அஞ்ஞானமானது, ஆளும் - (அவனை அடிமை கொண்டு) ஆளும்.

## சேமம் புகினும் யாமத் துறங்கு - 33

ப - ரை. சேமம் - காவற் கூடத்திலே, புகினும் - போய் (ஒருவேலையும் இல்லாமல்) இருந்தாலும், யாமத்து - ஏழரை நாழிக்குப் பின், உறங்கு - நீ நித்திரைபண்ணு.

## சையொத் திருந்தா லைய மிட்டுண் - 34

ப - ரை. சை ஒத்து இருந்தால் - பொருள் ஒத்திருந்தால் ஐயம் இட்டு - பிச்சை இட்டு, உண் - நீயும் உண்ணு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொக்க ரென்பவர் ரத்தம் பெறுவர் - 35**

ப — ரை. சொக்கர் என்பவர் — பொன்னுடையவர் என்று சொல்லப்படுபவர், அத்தம் - (அறமும் இன்னமும் மாகிய மற்றவைப்) புருஷார்த்தங்களையும், பெறுவர் — பெறுவார்.

**சொக்கு — பொன்**

**சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர் - 36**

ப — ரை. சோம்பர் என்பவர் — சோம்பலுடையவர் என்று சொல்லப்படுவோர் தேம்பி — (வறுமையினால்) வருந்தி, திரிவர் — (இரந்து) திரிவர்.

**தந்தைசொன் மிக்க மந்திர மில்லை - 37**

ப — ரை. தந்தை — பிதாவினுடைய சொல் - சொல்லுக்கு, மிக்க — மேற்பட்ட மந்திரம் - (பலனைத்தரும்) மந்திரமானது, இல்லை — (ஒருவனுக்கு எந்த நூலிலும்) இல்லை

**தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை - 38**

ப — ரை. தாயின் - மாதாவைப் பார்க்கினும், சிறந்த சிறப்புப் பொருந்திய ஒரு கோயிலும் — ஒரு ஆலயமும் இல்லை. (ஒருவனுக்கு எங்கும்) இல்லை

**திரைகட லோடியுந் திரவியந் தேடு - 39**

ப — ரை. திரைகடல் - அலைகின்ற கடலிலே, ஓடியும் - (தோணியேறித் தூர தேசங்களிற்) போயானலும், திரவியம் - திரவியத்தை, தேடு — நீ சம்பாதி.

**தீராக் கோபம் போரா முடியும் - 40**

ப — ரை. தீரா — நீங்காத, கோபம் - கோபமானது, போரா- (பின்பு) சண்டையாக, முடியும் - முடிந்து விடும்.

**துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு - 41**

ப — ரை. துடியா — (தன்கணவருக்குத் துன்பம் வந்த போது) மனம் பதையாத, பெண்டிர் — பெண்கள், மடியில் (அவர்) வயிற்றில், நெருப்பு — அக்கினிக்கு ஒப்பாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.** - 42

ப — ரை. தூற்றும் - தங்கணவர்மேற் (குற்றஞ்சொல்லித்) தூற்றுகிற, பெண்டிர் — பெண்களை, கூற்று எனத்தகும் - (அவருக்கு) இயமன் என்று எண்ணத்தகும்

**தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்** - 43

ப — ரை. தெய்வம் - தெய்வமானது, சீறின் - (ஒருவனைக்) கோபித்தால், கைதவம் (அவனுக்குக்) கைகூடியிருந்த தவமும், மாளும் - (பயன் கொடாமல்) அழியும்.

**தேடா தழிக்கிற் பாடா முடியும்** - 44

ப — ரை. தேடாது — (ஒருவன் வருந்திச்) சம்பாதியாமல், அழிக்கின் - இருக்கின்ற பொருளைச் செலவழித்தால், பாடா முடியும் - (அவனுக்குப் பின்) வருத்தமாக முடியும்.

**தையும் மாசியும் வையகத் துறங்கு** - 45

ப — ரை. தையும் - தை மாதத்திலும், மாசியும் - மாசி மாதத்திலும் வை அகத்து — (பனி வருத்தந் தாராத) வைக்கோல் வீட்டிலே உறங்கு — நீ நித்திரை பண்ணு.

**தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது** - 46

ப — ரை. தொழுது — (ஒருவரைச்) சேவித்து, ஊண் - உண்ணும் உணவினது, சுவையின் - சுவையைப்பார்க்கிலும், உழுது — உழுது பயிர் செய்து, ஊண் உண்ணும் சுவை, இனிது - இன்பந் தருவதாகும்.

**தோழ னோடு மேழைமை பேசேல்** - 47

ப — ரை. தோழனோடும் - (உன்) சினேகனோடாயினும், ஏழைமை — (உனக்கு இருக்கின்ற) சிறுமையைப் பேசேல் - (நீ எப்படிப்பட்ட வேளை யிலும்) பேசாதே.

**நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்** - 48

ப — ரை. நல் இணக்கம் அல்லது — நல்ல சகவாசம் அல்லாதது, அல்லல் - துன்பத்தையே, படுத்தும் - உண்டாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை - 49

ப — ரை. நாடு எங்கும் - தேசமெங்கும், வாழ — செழித்திருக்குமாயின், கேடு ஒன்றும் - (திருட்டு முதலாகிய) கேடொன்றும், இல்லை - இல்லை.

## நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை - 50

ப — ரை. நிற்க — (தன்னிடத்தே) நிலைபெறும்படி, கற்றல் - கற்றலாவது, சொல் - (தான் சொல்லும்) சொல்லுகளிலே திறம்பாமை — ஒருபோதும் தப்பிப் போகாமையாம்

## நீரகம் பொருந்திய வூரகத்திரு -51

ப — ரை. நீர் — நீர் வளமானது, அகம் - தனக்குள்ளே, பொருந்திய — (மழையில்லாத பஞ்சத்திலும்) அமைந்த ஊரகத்து — ஊரினிடத்திலே, இரு — நீ குடியிரு.

## நுண்ணிய கருமமு மெண்ணித் துணி -52

ப — ரை. நுண்ணிய — சிறிய, கருமமும் - தொழிலையும், எண்ணி — (முடிக்கும் வழியை நன்றாக) ஆலோசித்து, துணி — (நீ பின்பு அதைச்) செய்யத் துணி.

## நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு -53

ப — ரை. நூல் - தருமநூலிலே சொல்லப்பட்ட, முறை (விதிகளின்) முறையை, தெரிந்து — அறிந்து சீலத்து நல்லொழுக்க வழியில், ஒழுகு — நீ நட.

## நெஞ்சை யொளித்திரு வஞ்சக மில்லை -54

ப — ரை. நெஞ்சை — (தம்முடைய) மனசுக்கு, ஒளித்த — மறைக்கப்பட்ட, ஒரு வஞ்சகம் - யாதொரு வஞ்சனையும், இல்லை — (யாவரிடத்திலும்) இல்லை.

## நேரா நோன்பு சீரா காது -55

ப — ரை. நேரா — (மனசினால்), உடன்பாடாத, நோன்பு — தவமானது, சீர் ஆகாது - சீராக முடியாது

## நைபவ ரெனினு நொய்ய வுரையேல் -56

ப — ரை. நைபவர் எனினும் - (கேட்பவர் எதிர்பேசாமல்) வருந்து வோராயின், நொய்ய — அற்பமான வார்த்தைகளை, உரை யேல் - நீ சொல்லாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நொய்யவ ரென்பவர் செய்யவ ராவர் -57**

ப — ரை. நொய்யவர் என்பவர் — (உருவத்தினாலே) சிறியவர் என்று இகழப்படுவோரும், வெய்யவர் ஆவர் — செய் காரியத்தால் யாவரும் விரும்புங் குணத்தையுடையவராவார்.

**நோன் பென்பதுவே கொன்று தின்னாமை -58**

ப — ரை. நோன்பு என்பது — தவமென்று சொல்லப்படுவது கொன்று — (ஒரு சீவனை) வதை செய்து, தின்னாமை — (அதன் மாமிசத்தைத்) ஊனைத்) தின்னாமையேயாம்.

**பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும் -59**

ப — ரை. பண்ணிய — (ஒருவன்) செய்த பயிரின் - பயிரின் விளைவினாலும் விளைவில்லாமையினாலும் புண்ணியம் -(அவனிடத்தே) புண்ணியம் இருத்தலும், இல்லாமையும், தெரியும் - அறியப்படும்.

**பாலோ டாயினுங் கால மறிந்துண் -60**

ப —ரை. பாலோடு ஆயினும் - பாலோடு கூடிய அன்னத்தை உண்டாலும், காலம் அறிந்து — (உண்ணத்தகுங்) காலத்தை அறிந்து, உண் - (நீ அதை) உண்ணு.

**பிறன்மனை புகாமை யறமெனத் தகும் -61**

ப — ரை. பிறன் - பிறனுடைய, மனை — மனையாளிடத்தில், புகாமை (இச்சித்துப்) போகாமையே, அறம் எனத்தகும் - (எல்லாத் தருமங் களிலும் உயர்ந்த) தருமம் என்று சொல்லத்தகும்.

**பீரம் பேணி பாரந் தாங்கும் -62**

ப — ரை. பீரம் பேணி - முலைப்பால் குறைவற உண்டு வளர்ந்தவன், பாரம் - பாரமான சுமையை, தாங்கும் - சுமப்பான்.(அதுபோல, முன்னே காரணங்களைக் குறைவறக் கொண்டவன் பின்னே பெரிய காரியங் களையும் வருத்தமின்றி முடிப்பான்)
**பீர் - முலைப்பால், அம் சாரியை**

**புலையுங் கொலையுங் களவுந் தவிர் -63**

ப — ரை. புலையும் - புலாலுண்ணுதலையும், கொலையும் - சீவ வதை செய்தலையும், களவும் - பிறர் பொருளைத் திருடுதலையும், தவிர் — (நீ செய்யாது) ஒழித்து விடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூரியோர் கில்லை சீரிய வொழுக்கம் -64**

ப — ரை. பூரியோர்க்கு — கீழ்மக்களுக்கு, சீரிய — சிறப்பாகிய ஒழுக்கம், நடையானது, இல்லை — (உண்டாதல்) இல்லை.

**பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும் - 65**

ப — ரை. பெற்றோர்க்கு — (மெய்ஞ்ஞானத்தைப்) பெற்றவர்க்கு, சுற்றமும் உறவினர் மேல் ஆசையும், சினமும் - (மற்றவர் மேல்) வெறுப்பும், இல்லை - இல்லை.

**பேதைமை யென்பது மாதர்க் கணிகலம் - 66**

ப — ரை. பேதைமை என்பது — அறியாமை யென்று சொல்லப்படுங் குணமானது, மாதர்க்கு — பெண்களுக்கு, அணிகலம் - ஆபரணமாகும்.

**பையச் சென்றால் வையந் தாங்கும் -67**

ப — ரை. பைய — மெல்ல, சென்றால்- (ஒருவன் தகுதியான வழியிலே) நடந்தால், வையம் - பூமியிலுள்ளோர், தாங்கும் - (அவனை) மேலாகக் கொள்வர்.

**பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர் -68**

ப — ரை. பொல்லாங்கு என்பவை — தீங்குகளென்று சொல்லப்பட்டவைகளாகிய, எல்லாம் - எல்லாவற்றையும், தவிர் — (நீ செய்யாது) ஒழித்துவிடு

**போனக மென்பது தானுழந் துண்டல் - 69**

ப — ரை. போனகம் என்பது — போசனமென்று சொல்லப்படுவது தான் உழந்து - தான் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து, உண்டல் - உண்ணுதலாம்.

**மருந்தே யாயினும் விருந்தோ டுண் -70**

ப — ரை. மருந்தே — ஆயினும் - (உண்ணப்படுவது கிடைத்தற்கு அரிய) தேவாமிர்தமேயானாலும், விருந்தோடு— (வந்த) விருந்தினர்களோடு, கூடி உண் - நீ உண்ணு.

**மாரி யல்லது காரிய மில்லை -71**

ப — ரை. மாரி அல்லது — மழையினால் அல்லாமல் காரியம் - யாதொரு காரியமும் இல்லை — (யாருக்கும் நடப்பது) இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை -72

ப — ரை. மின்னுக்கு எல்லாம் - (வானத்திலே காணப்பட்ட) மின்னலுக்கு எல்லாம், பின்னுக்கு மழை (அப்போது மழையில்லை யாயினும்) பின்னே மழையுண்டாகும். (அதுபோல ஒருவனிடத்திலே காணப்பட்ட நல்ல முயற்சிகளுக்கெல்லாம் அப்போது பயன் இல்லை யாயினும் பின்னே பயன் உண்டாகும்.)

### மீகாம னில்லா மரக்கல மோடாது -73

ப — ரை. மீகாமன் - (தன்னை ஓட்டத்தக்க) மாலுமி இல்லா - இல்லாத மரக்கலம் - தோணியானது, ஓடாது — (கடலிலே செவ்வையாக) ஓடாது.(அதுபோலத் தன்னை முடிக்கத் தக்கவன் இல்லாத யாதொரு கருமமும் செவ்வையாக முடியாது.)

### முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும் -74

ப — ரை. முற்பகல் - ஒரு மூகூர்த்தகாலத்தின் முன் பங்கிலே, செய்யின் - (பிறனுக்குத் தீங்கு) செய்தால், பிற்பகல் - அதன் பின் பங்கிலே, விளையும் - (செய்தவனுக்கு) அத்தீங்கு தானே உண்டாகும்.

**பகல் - மூகூர்த்தம். (ஒன்றரை மணிநேரம்)**

### மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம் -75

ப — ரை. மூத்தோர் — (கல்வியறிவினாலே) முதிர்ந்தோர், சொன்ன — சொல்லிய, வார்த்தை — வார்த்தையானது, அமிர்தம் - தேவாமிர் தத்தைப் போலும்

### மெத்தையிற் படுத்த னித்திரைக் கழகு -76

ப — ரை. மெத்தையின் - பஞ்சணையிலே, படுத்தல் - படுத்தலானது, — நித்திரைக்கு, - (ஒருவன்செய்கின்ற) நித்திரைக்கு அழகு — அழகாகும்.

### மேழிச் செல்வங் கோழை படாது -77

ப — ரை. மேழி - கலப்பை (பிடித்து உழுது பயிர் செய்தலால் உண்டாகுகின்ற) செல்வம் — செல்வமானது கோழைபடாது — (ஒருபோதும்) குறைவை அடையாது.

### மைவிழி யார்தம் மனையகன் றொழுகு -78

ப — ரை. மைவிழியார்தம் - மை தீட்டிய கண்ணையுடைய வேசிகளது, மனை — வீடுகளை, அகன்று ஒழுகு — நீ அணுகாமலே விலகிப்போ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொழிவது மறுக்கி னழிவது கருமம் -79**

ப – ரை. மொழிவது – (கற்றோர்) சொல்லுகின்ற உபாயத்தை, மறுக்கின் - கேளாமற் செயதால், கருமம் - ஒருவன் செய்யுந் தொழில், அழிவது – கெடுவதாகும்.

**மோன மென்பது ஞான வரம்பு -80**

ப – ரை. மோனம் என்பது – மௌன நிலை என்பது, ஞானம் - மெய்ஞ்ஞானத் துக்கு, வரம்பு – எல்லையாகும்.

**வளவ னாயினு மளவறிந் தழித்துண் -81**

ப – ரை. வளவன் ஆயினும் - (சமீபத்திலே) சோழனுக்கு ஒப்பான வனாய் இருந்தாலும், (அளவு - பொருள் வரவின்) அளவை அறிந்து – தெரிந்து அழித்து – செலவழித்து, உண் - நீ அனுபவி.

**வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும் -82**

ப – ரை. வானம் - மழையானது சுருங்கின் - பெய்தல் குறையுமாயின், தானம் - (சற்பாத்திரங்களுக்குக் கொடுக்கிற) கொடையும், சுருங்கும் - குறைவுபடும்.

**விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம் -83**

ப – ரை. விருந்து இலோர்க்கு – விருந்தினரை உபசரித்தல் இல்லா தவருக்கு, பொருந்திய – தாம் பொருந்திய, ஒழுக்கம் - இல்லறம், இல்லை – (இருந்ததாயினும்) இல்லாததற்குச் சமானமாகும்.

**வீரன் கேண்மை கூரம் பாகும் -84**

ப – ரை. வீரன் - வீரனுடைய, கேண்மை – சினேகம், (ஒருவனுக்கு இருந்தால்), கூர் அம்பு ஆகும் - (அவனுக்கு அதுவே தன் பகையை வெல்லுதற்குக்) கூர்மை பொருந்திய அம்பாகும்.

**உரவோ ரென்கை யிரவா திருத்தல் -85**

ப – ரை. உரவோர் என்கை – வல்லவரென்று சொல்லப்படுதல், இராவது (தமக்குச் சிறுமை வந்த காலத்திலும் (பிறரை) இரவாமல், இருத்தல் - இருக்கையாம்.

**ஊக்க முடைமை யாக்கத்திற் கழகு -86**

ப – ரை. ஊக்கம் - (செய்தொழிலிலே) மனந்தளராமையை, உடைமை – (ஒருவன்) உடையனாதல் ஆக்கத்திற்கு – (அவன்) செல்வத்திற்கு, அழகு – அழகாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை -87

ப — ரை. வெள்ளைக்கு — களங்கமில்லாத பரிசுத்த குணமுடைய வனிடத்து, கள்ளம் - வஞ்சனை பொருந்திய, சிந்தை — நினைப் பானது, இல்லை - இல்லை.

## வேந்தன் சீறி னாந்துணை யில்லை -88

ப — ரை. வேந்தன் - அரசனானவன், சீறின் - ஒருவனைக் கோபித் தால், ஆம் — (அப்போது அவனுக்கு உபயோகம்) ஆகின்ற துணை — துணை, இல்லை — (ஒருவரும்) இல்லை.

## வையந் தோறுந் தெய்வந் தொழு -89

ப — ரை. வையம் தோறும் - பூமியிலுள்ள தலந்தோறும் (போய்) தெய்வம் — கடவுளை, தொழு — (நீ தரிசித்து) வணங்கு

## ஒத்த விடத்து நித்திரை கொள் -90

ப — ரை. ஒத்த விடத்து — (மேடுபள்ளம் இல்லாமற்) சமமான இடத்திலே, நித்திரை கொள் - (நீ படுத்து) நித்திரை பண்ணு.

## ஓதாதார்க் கில்லை யுணர்வொடு மொழுக்கம் -91

ப — ரை. ஓதாதரர்க்கு — (அறிவு நூல்களைப்) படியாதவக்கு, உணர்வொடும் - அறிவுடனே, ஒழுக்கம் - நல்ல நடையும், இல்லை - - (உண்டாதல்) இல்லை.

*கொன்றைவேந்தன் மூலமும் உரையும்*

- முற்றிற்று -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரையா அச்சகம்

கொம்பியூட்டர் ஓவ்(f)செற பிறின்ட்

138, நாவலர் வீதி, (நாவலர் பாடசாலை முன்பாக) யாழ்ப்பாணம். T.P. No. 2881


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org